



தமிழக முதல்வர் கடந்த மாதம் 9ம் தேதி திருச்சி மாவட்டத்தில் நடந்த பல்வேறு நலத்திட்ட பணிகள் தொடக்க விழாவில் திருச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட 54,000 ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கும் பணியை தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக ஏழை எளிய மக்கள் குடியிருக்கும் வீட்டிற்கான பட்டா வழங்க வேண்டும் என்பதே தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் லட்சியம், திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, 2006 பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டாக்களை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.






முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா செம்மொழி நாளாக திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக, உள்ளாட்சியில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை கொண்டாடும் வகையில், திருச்சி மாமன்ற பெண் உறுப்பினர்களின் பங்கேற்போடு செம்மொழி நாள் பேரணி சென்று, திருச்சி மாநகர் டி.வி.எஸ். டோல்கேட் பகுதியில் அமைந்துள்ள கலைஞரின் திருஉருவச் சிலைக்கு, திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், பள்ளிக்கள்ளித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பெண் பிரதிநிதிகள், மாவட்டம், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

### திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

# 2006 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்!

திருவெறும்பூர், ஜுன் 5 -

தமிழக முதல்வர் கடந்த மாதம் 9ம் தேதி திருச்சி மாவட்டத்தில் நடந்த பல்வேறு நலத்திட்ட பணிகள் தொடக்க விழாவில் திருச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட 54,000 ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்கும் பணியை தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக ஏழை எளிய மக்கள் குடியிருக்கும் வீட்டிற்கான பட்டா வழங்க வேண்டும் என்பதே தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் லட்சியம். திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, 2006 பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டாக்களை வழங்கிசிறப்புரையாற்றினார் .நடந்த விழாவில் 23 திருநங்கைகள் உட்பட 2006 பேருக்கு இலவச வீட்டு மனைகளை வழங்கினார் . நிகழ்வானது திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி அரியமங்கலம் கோட்ட அலுவலகம் மற்றும் திருவெறும்பூர் ஒன்றிய அலுவலகம் துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் மண்டலம் மூன்றின் தலைவர் மு.மதிவாணன், துவாக்குடி நகர மன்ற தலைவர் காயம்பு, ஒன்றிய கழகச் செயலாளர்கள் கங்காதரன், கருணாநிதி, பேரூர் கழகச் செயலாளர் தங்கவேலு, பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், தர்மராஜ், விஜயகுமார், சிவக்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், திருச்சி டி.ஆர்.ஓ.ராஜலட்சுமி, ஆர்.டி.ஓ.அருள், திருவெறும்பூர் தாசில்தார் ஜெயபிரகாசம், செயற்பொறியாளர் ஜெகஜீவன் ராமன் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இலவச வீட்டு மனை பட்டாக்களை தமிழக பள்ளி கல்வி அமைச்சர் அன்பில் மகேஸ பொய்யாமொழி வழங்கி பேசியதாவது:-

தமிழக மக்களை பெரிதும் நேசிக்கும் கலைஞரின் 102 வது பிறந்தநாள் விழாவில் திருவெறும்பூர் தொகுதிக்கு உட்பட்ட சுமார் 2000 த்திற்கும் மேற்பட்டோருக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவது அவருக்கு புகழ் சேர்ப்பதாகும். கையளவு நிலம் இருந்தாலும் அது சொந்த நிலமாக இருக்க வேண்டும் என எல்லோரும் நினைப்பார்கள் தற்பொழுது வீட்டுமனை பட்டா வழங்கியவர்களில் தகுதியானவர்களை கண்டறிந்து கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் அவர்களுக்கு வீடு கட்டி தரப்படும் என்றும் மேலும் நீதிமன்ற குறுக்கீடு உள்ளிட்ட காரணங்களால் வீட்டுமனை பட்டா வழங்க முடியாதவர்களை நாங்கள் கைவிட மாட்டோம் என்றும் உங்களை பாதுகாப்போம் உங்கள் ஆனந்தத்தோடு தற்பொழுது நானும் ஆனந்தமாக கலந்து கொள்கிறேன் என்றார்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக கிளைச் செயலாளர்கள், பி.எல்.ஏ. 2 வைச் சேர்ந்த

# நிர்வாகிகளின் வாரிசுகள் 57 பேருக்கு கல்வி உதவித்தொகை!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், ஜுன் 5-

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள திமுக நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், பி.எல்.ஏ. 2 வைச் சேர்ந்த நிர்வாகிகளின் குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் கல்வி மற்றும் உயர் கல்விக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை என்ற பெயரில் கடந்த ஐந்து ஆண்டுகளாக மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கி வருகிறார்.

அதன் அடிப்படையில்

மோகனூர் ஒன்றியம், இராசிபுரம் ஒன்றியம் ஆகிய ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் கிளை செயலாளர்கள், பி.எல்.எ. 2 ஆகியோரின் வாரிசுகளுக்கு கல்வி மற்றும் உயர் கல்விப் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக அலுவலகம் கலைஞர் இல்லம் பேராசிரியர் அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் தலைமை தாங்கினார். ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு 57 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர்கள் ராசிபுரம் ஜெகநாதன், நாமக்கல் பழனிவேல், மோகனூர் நவலடி, துணை மேயர் பூபதி, நகர செயலாளர் ராணா ஆனந்த், சிவகுமார், மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் பூவராகவன், மாவட்ட துணை செயலாளர் நலங்கிள்ளி,

மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் பா.கிருபாகரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பொன்.சித்தார்த், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்பரர் வ. இளம்பரிதி, சார்பு அணி துணை அமைப்பாளர்கள் சர்தார், முகேஷ், சத்யசீலன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், தெக்கலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு புதிய பாடநூல்கள், சீருடைகள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட கல்வி அலுவலர் காளிமுத்து, வடக்கு மாநகரப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், திருமுருகன் பூண்டி ஒன்றியச் செயலாளர் எஸ்.ஆர்.பழனிசாமி, கருவலூர் ஊராட்சி முன்னாள் தலைவர் எல்ஜசி அவினாசியப்பன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு பட்டுக்கோட்டையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் அலங்கரிக்கப்பட்ட கலைஞர் திருவுருவப்படத்திற்கு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், மாவட்ட பொறுப்பாளர் தி.பழநிவேல் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் என்.அசோக்குமார் எம்.எல்.ஏ, பழஞ்சூர் செல்வம் உள்ளிட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்ச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.



திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் சட்டமன்ற அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளில் அவரது திருவுருவப் படத்திற்கு எஸ். கதிரவன் எம்.எல்.ஏ. தலைமையில் கழகத்தினர் மலர் தூவி மரியாதை செய்தனர். உடன் ஒன்றிய செயலாளர்கள்,நகர செயலாளர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், கவுன்சிலர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருவாரூர் மாவட்டத்தை உருவாக்கி, பல்வேறு கட்டமைப்புக்களைத்தந்து உலக அரங்கில் உயரசெய்த மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கலைஞர் பிறந்தநாளில் திருவாரூர் மாவட்ட மக்கள் பெருந்திரளாக திரண்ட ஊர்வலம் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் தலைமையில் நடைபெற்றது.